சிந்தனை
வெள்ளிவிழாச் சிறப்பிதழ் - 1999

# யாழ்ப்பாண மாவட்ட தீவக மக்களின் நம்பிக்கைகள் - ஓர் ஆய்வு நோக்கு

கி. விசாகரூபன்

## 1.0 தோற்றுவாய்

நாட்டார் வழக்காற்றியல் (Folklore) என்ற கல்விபுலமானது, பல்வேறு பகுப்புக் களை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. அவ்வாறான பகுப்புக்களில் "நம்பிக்கை"யும் (Belief) பிரதானமான ஒன்றாக அமைந்து உள்ளது. ஈழத்தமிழர்களிடையே வழக்கில் உள்ள நம்பிக்கைகள் பற்றிய ஆய்வுகள் எதுவும் இதுவரை முனைப்புப் பெறவில்லை என்றே கூறலாம். இவ்வாய்வு இத்துறை குறித்த ஓர் ஆரம்ப ஆய்வாக அமைகிறது. இவ்வாய்வுக் கட்டுரை நாட்டுப்புற மக்களிடையே நிலவும் நம்பிக்கைகள் பற்றியும், அவற்றின் அடிப்படை கள் பற்றியும், அவற்றின் பயில்நிலை முக்கியத்துவம் பற்றியும் நோக்குவதாக அமைகிறது. கட்டுரைக்குரிய ஆய்வுத்தரவுகள் யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் (Field work) மூலம் பெறப்பட்டவையாகும்.

## 2.0 நம்பிக்கை : சொல்லும் பொருளும்

தமிழில் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் 'நம்பு' என்ற சொல் 'விருப்பம்' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.[1] ஆயினும் சங்க இலக்கியங் கள் பவலற்றிலும் 'நம்பிக்கை' என்ற சொல் நம்பிக்கையைச் சுட்டப் பயன்பட்டுள்ளமை யினைக் காண முடிகிறது.[2] பிற்கால அகராதிகளும், லெக்சிகன்களும் 'நம்பிக்கை' என்பதற்கு விசுவாசம், நிசம், சத்தியம், உறுதிப் பாடு[3] முதலான பொருள்களை முதன்மைப் படுத்துகின்றமையினை அவதானிக்க முடிகிறது. ஆங்கில அகராதிகள் 'Belief' என்ற சொல்லினை இத்தமிழ்ச் சொல்லிற்கு இணையாகக் குறிப்பிடுகின்றன.

## 3.0 நம்பிக்கை : வகையும் பண்பும்

நாட்டுப்புற மக்களிடையே வழங்கிவரும் நம்பிக்கைகளை 'ஆலன்டண்டிஸ்' (Alan Dundes) என்ற மேலைத்தேய அறிஞர் மூன்று வகைகளாகப் பிரித்துக் கூறுவர்.[4] அவை வருமாறு:

1. சகுன அடிப்படையில் விளங்கும் நம்பிக்கைகள்.
2. மக்களால் கட்டப்படுத்தக் கூடிய சகுன நம்பிக்கைகள்.

3. சில நம்பிக்கைகளில் கூறப்படும் விளைவுகளுக்குப் பரிகாரத்தோடு கூடிய நம்பிக்கைகள்.

மேலே குறிப்பிட்ட வகைப்பாடுகளை உள்வாங்கியதாக இந்நம்பிக்கைகளை பிரதான மாக இரண்டு வகையாக வகைப்படுத்துவதே தமிழ் ஆய்வுலகில் வழக்கமாக இருந்து வருகிறது.

1. நம்பிக்கை (Belief)
(காரண காரியத் தொடர்புகட்குட்பட்டு சான்றுகளின் வாயிலாக நிறுவப் படுவது)

2. மூடநம்பிக்கை (Superstition)
(சான்றுகளின் அடிப்படையிலோ அல்லது காரண காரிய அடிப்படை யிலோ விளக்க முடியாதது)

தமிழ் மக்களிடையே நம்பிக்கைகளும், மூடநம்பிக்கைகளும் பெருமளவில் பயில் நிலையில் உள்ளமையினை 'கள ஆய்வுகள்' மூலம் இனங்காண முடிகிறது. மூடநம்பிக்கை கள் குறிப்பிட்ட சமுதாயத்தின் அறிவு வளர்ச்சியினை வெளிப்படுத்துவனவாக உள்ளன. மூடநம்பிக்கையினை, தனிமனித நலனுக்கும் சமூகக்கட்டுக் கோப்புக்கும் அடிப்படையான ஒன்றாக உளவியலாளர் குறிப்பிடுவதும் இவ்விடத்தில் நோக்கத் தக்கதாகும்.[5]

## 4.0 நம்பிக்கை : தோற்றமும் தொடர்ச்சியும்

மனித இனம் தோற்றம் பெற்றபோதே நம்பிக்கைகளும் தோற்றம் பெற்றுவிட்டன. அச்சத்தின் காரணமாக மனிதன் இயற்கை யின் தோற்றத்தினையும், செயற்பாடுகளையும் தனது வாழ்வியல் நடப்புக்களோடு இணைத்து நோக்கிய நிலையில் நம்பிக்கைகள் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். நன்மை விளைய வேண்டும் என்ற மனித மனத்தின் விருப்பார் வம் இந்நம்பிக்கைகளின் எல்லையினை அகலித்து, நிலைநிறுத்தி வந்துள்ளமை பற்றி சமூகவியலாளரும், நாட்டாரியலாளர்களும் எடுத்துக் கூறியுள்ளனர்.

மனிதனில் நலவுணர்வு, காரண காரியத்தைக் காண முனைவதில்லை. இந் நிலையில் நம்பிக்கைகளை மனித மனம் உள்வாங்கத் தலைப்படுகிறது. இதனால் நம்பிக்கைகளை 'உள உருவாக்கம்' (Mental creation) என அறிஞர் குறிப்பிடுவர்.[6] இந்நம்பிக்கைகள் காலந்தோறும் பெருகி வருவதனையும், வழிவழியாக அவை பேணப்பட்டு வருவதனையும் அவதானிக்க முடிகிறது. இவை வழக்கில் மிகுதியாகவும், இலக்கிய வழக்கியலில் சிறுபான்மையாகவும் பயின்று வருகின்றன.

## 5.0 நாட்டுப்புற நம்பிக்கைகள்

தமிழ் மக்களிடையே பல்வேறுபட்ட நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. அவை அனைத்தையும் இவ்விடத்தில் ஆய்வுக்குட் படுத்துவதென்பது இயலாத விடயம். வகை மாதிரியாக பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு, நிமித்தம், திருஷ்டி, பேய், பிசாசு, விதி, திட்டு, மாதம், கிழமை, எண் முதலான நம்பிக்கைகள் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

### 5.1 பிறப்பு

ஆண் குழந்தை தந்தையின் சாயலைக் கொண்டு பிறந்தால் தந்தைக்கு ஆயுள் குறைந்துவிடும் என்ற நம்பிக்கை கிராமப்புற மக்களிடையே காணப்படுகிறது. இவ்வாறான பிள்ளைகளை 'அப்பனைத் தின்னிப் பிள்ளை' என்று அழைப்பர்.[7] இந்நம்பிக்கைக்கான அடிப்படை என்னவென்று தெரியவில்லை. இதுபோலவே சித்திரை மாதத்தில் ஆண் குழந்தை பிறப்பதும் பல்வேறு துன்பங்களை யும், குடும்பச் சச்சரவுகளையும் தோற்றுவிக்கும் என நம்புகின்றனர். 'சித்திரைப் புத்திரன் சீரழிவு' என்ற தொடர் இது தொடர்பாக வழக்கில் உள்ளது. இவ்வாறு சித்திரையில்

புத்திரன் பிறப்பதைத் தவிர்க்கும் முகமாகவே ஆடி மாதத்தில் திருமணம் செய்வது விலக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இக்காலப் பகுதியில் மணமகளைத் தாய் வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிடுவர். ஆடிமாதம் வேளாண்மையின் தொடக்ககாலம் என்பதால் இக்காலத்தில் கர்ப்பமாவது வேலைகளுக்கு இடைஞ்சல் என்பதாலும் இவ்வாறான நம்பிக்கைகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம்.

மூல நட்சத்திரத்தில் ஆண் குழந்தை பிறப்பதை அதிஷ்டமானதாகக் கருதுகிறார்கள். 'ஆண் மூலம் அரசாளும்' என்ற நம்பிக்கை வலுவாக வேரூன்றியுள்ளது. அதேநேரம் பெண் குழந்தை மூல நட்சத்திரத்தில் பிறப்பது நிர்மூலமான செய்கைகளைத் தோற்றுவிக்கும் என நம்புகிறார்கள். 'பெண் மூலம் நிர்மூலம்' என்ற பழமொழி இது தொடர்பாக வழக்கத்தில் உள்ளது. மூல நட்சத்திரத்தைப் பின்மூலம், முன்மூலம் என இரண்டாகக் கணித்துப் பலன் பார்க்கும் வழக்கம் இருந்தது என்றும் இம்முறையே காலப்போக்கில் பின் மூலத்தைப் பெண் மூலமாக்கி விட்டது என்று கருதுவாருமுளர். பின்மூலம் முன்மூலத்தைப் போல அத்தனை விசேடமானதாகச் சுட்டப் படுவதில்லை.[8]

குடும்பத்தில் ஐந்தாவதாகப் பெண் குழந்தை பிறந்தால் அதனை இராசியான விடயமாக நம்பும் வழக்கம் பரவலாக உள்ளது.[9] 'அஞ்சாங்கால் பெண் கெஞ்சினாலும் கிடையாது' என்ற பழமொழியும் இதனோடு தொடர்பானதாக வழங்கப்பட்டு வருகிறது. இதனை நம்பி, ஐந்தாவதாக ஆண் குழந்தை கிடைப்பதைத் தவிர்க்கும் முகமாக நான்கு பிள்ளைகளுடன் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் வழக்கம் படித்தவர்களிடம் காணப்படுகிறது. தமிழ்ச் சமுதாயத்தில் பெண் குழந்தைகளைப் பெறுவதில் இருந்த வரவேற்பின்மையினை நீக்கும் பொருட்டு உளவியல் ரீதியாக அவர்களைத் தோற்றுவிக்கும் அடிப்படையிலேயே இந்நம்பிக்கை உருக் கொண்டிருக்க வேண்டும்.

வீடுகளிலே பிரசவங்கள் நடைபெற்ற போது குழந்தை பிறப்பதில் தாமதம் ஏற்பட்ட பொழுது 'பறையர்' சமூகத்தவரைக் கொண்டு கோவில்களிலே நேர்த்தியடிப்படையில் பறையடிப்பித்தால் சுகப்பிரசவம் நிகழும் என்று நம்புகிறார்கள். இதனைப் 'பெருமுழக்கம்' என்று அழைக்கின்றனர்.

## 5.2 பூப்பு

பெண் பூப்படைந்த நாள், மாதம், நேரம் முதலானவற்றிக் கொண்டு 'பலன்' பார்க்கும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. ஆடி மாதத்தில் பெண் பூப்படைவது அத்துணை விசேடமானதாகக் கருதப்படுவதில்லை என்பது தெரிய வருகிறது.

மாத விலக்குடைய பெண்கள் செடிகளை நட்டால் பயன்மிகும் என்றும், கருவேப்பிலை முதலான செடிகளை நட்டால் நன்றாக வளரும் என்றும், வயல்களில் விதைக்கவுள்ள விதைகளை தீட்டுடைய பெண்களைக் கொண்டு எடுத்து விதைப்பது அதிக விளைச்சலைத் தரும் என்றதுமான நம்பிக்கைகள் பலவும் தமிழக மக்களிடையே வழங்கி வருகின்றமையை ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.[10]

மேலே குறிப்பிட்டது போன்ற நம்பிக்கைகள் வடஅமெரிக்கப் பகுதிகளிலும் வழக்கில் உள்ளமைபற்றி 'தாம்சன்' என்ற அறிஞர் எடுத்துக் காட்டியுள்ளார்.[11] பெண்களிடமுள்ள 'கருவளம்' தொடர்பான நம்பிக்கையே இவற்றின் அடிப்படையாக உள்ளது. ஆயினும் மேலே சுட்டிய நம்பிக்கைகளுக்கு நேர்எதிர் மாறான நம்பிக்கைகள் ஆய்வுப் பிரதேச மக்களிடையே வழக்கில் உள்ளதனை அறிய முடிகிறது.[12] தீட்டுடைய பெண்கள் தீட்டு விலகும்வரை சுபகாரியங்கள் எதிலும் ஈடுபடக் கூடாது என்றும், இவ்வாறு ஈடுபட்டால் அக் காரியங்கள் பாழாகும் என்றும் நம்புகிறார்கள். அத்துடன் துளசி, வெற்றிலை போன்ற செடிகளுக்கு அருகில் போவதோ, அவற்றைத் தீண்டுவதோ மிகப் பெரிய குற்றங்களாக

உருவாக்கி வளர்க்கப்பட்டுள்ளன. துளசி, வெற்றிலை முதலான செடிகள் 'குற்றம் தாங்காதவை' என்று நம்புகின்றார்கள்.[13]

பூப்புத் தொடர்பான 'விலக்கல்'கள் பலவற்றுக்கும் சுகாதாரமே அடிப்படையாக உள்ளது. வெற்றிலை, துளசி, கிணற்றுநீர் போன்றவை இறைவழிபாட்டோடும், உணவு நடைமுறைகளோடும் தொடர்புபட்டவை. எனவே அவற்றை தீட்டுடைய பெண்கள் தீண்டுவதால் அசுத்தம் ஏற்படும் என்பது இந்நம்பிக்கைகளின் அடிப்படையாக உள்ளது.

## 5.3 திருமணம்

திருமணத்தில் ஜாதகங்கள் (குறிப்புக்கள்) பொருந்துவது பிரதானமான நம்பிக்கையாக உள்ளது. செவ்வாய்க்குற்றமுள்ள குறிப்புள்ள வருக்கு குற்றமுள்ள குறிப்புடையவரையே இணை சேர்க்கும் நம்பிக்கை வழக்கம் வலுவாக வேரூன்றி உள்ளது. செவ்வாய்க் குற்றமுள்ள காதல் சோடிகள் வலுக்கட்டாய மாகப் பிரிக்கப்படுகிறார்கள். அவ்வாறு செய்யாதுவிடின் குற்றமில்லாத குறிப்புடைய வர் இறந்துவிடுவார் என நம்புகின்றனர். இது விடயமாகப் பல்வேறு உதாரணங்களைக் காட்டுகின்றனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பிறிதொரு குடும்பத்தில் 'மாற்றுச் சம்பந்தம்' செய்வது அத்துணை நல்லவிடயமாகக் கருதப்படவவில்லை. 'ஒரு குடும்பம் வாழும், மறு குடும்பம் தாழும்' என்ற நம்பிக்கை பரவலாக வழக்கில் உள்ளதனை அறிய முடிகிறது. தங்கையோ, தமக்கையோ வாழா வெட்டியாக அல்லது கொடுமைக்கு உட்படு பவளாக உள்ளபோது தமையனோ, தம்பியோ தன் மனைவியை அவள் நல்லவளோ, கெட்டவளோ அவளை வேண்டும் என்றே பழிவாங்குகின்றான். இதுவே இந்நம்பிக்கையின் அடிப்படையாதல் வேண்டும். துன்பமான விடயங்கள் எதுவும் இரண்டு குடும்பங்களை யும் துன்பத்தில் ஆழ்த்திவிடும் என்பதும் இத்தகு நம்பிக்கைகளை வலுப்படுத்தியிருக்க லாம். கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் மேலே குறிப்பிட்டவற்றை உறுதிப்படுத்துவனவாக உள்ளன.

## 5.4 இறப்பு

தமிழர்களிடையே இறப்புத் தொடர்பாக பல்வேறு நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. இறப்பிற்கும் நல்லநாள் பார்க்கும் வழக்கம் இருந்து வருகிறது. உதாரணமாக வைகுண்ட ஏகாதசித் தினத்தன்று உயிர்துறக்கும் ஒருவர் நேரடியாக சொர்க்கத்திற்குப் போய்விடலாம் என்ற நம்பிக்கை பரவலாக உள்ளது.[14]

அவலச் சாவாக, ஆயுளைப் பூரணப் படுத்தாது இடையில் இறக்கும் ஒருவரின் 'ஆவி' வீட்டைவிட்டுப் போக நெடுநாள் எடுக்கும் என்று நம்புகிறார்கள். வாழ்வின் சௌகரியங்களை அனுபவிக்காமல் இடை நடுவில் இறக்கும் தம்பிள்ளைகளை உறவினர் களைப் பற்றிய ஆதங்கங்கள், நினைவுகள் பற்றுடையோர்களிடமிருந்து விலக நீண்ட நாட்கள் எடுப்பது வழக்கம். இதுவே இவ்வாறான நம்பிக்கைகளின் தோற்றுவாய்க்கான அடிப்படையாக இருத்தல் வேண்டும்.

அச்சுவினி, பரணி, கார்த்திகை ஆகிய பஞ்சமி நட்சத்திரங்களில் இறப்பவர்களுக்கு அவர்கள் இறக்கப் போகின்றார்கள் என்று தெரிந்தவுடனே, அவர்கள் இறக்கும் முன்பே வீட்டுக்கு வெளியே முற்றத்தில் ஓலைக் கொட்டில் ஒன்றை இணக்கி (இதனைப் பஞ்சமிக் கொட்டில் என அழைப்பர்) அதற்குள் சம்பந்தப்பட்டவரை வைத்திருந்து உயிர்பிரியவிடும் வழக்கம் உள்ளது. அத்துடன் இறந்தவரின் உடலை எடுத்தவுடன் மேற்படி கொட்டிலைத் தீயிட்டுக் கொழுத்தும் நடை முறையும் காணப்படுகிறது. இவ்வாறு செய்வதன் மூலம் தொடர்ச்சியான சாவுகளைத் தடுக்கலாம் என்று நம்புகின்றனர்.[15]

சனிக்கிழமைகளில் மரணம் நிகழும் வீடுகளில் தொடர்ச்சியாக மரணம் நிகழும்

என்ற நம்பிக்கை நிலவுகிறது. வெள்ளிக் கிழமைகளில் பிணத்தை அடக்கம் செய்வதைத் தவிர்த்து வருகிறார்கள். இவ்வாறான நம்பிக்கைகளின் அடிப்படைகளை விளங்கிக் கொள்ள முடியவில்லை.

இறப்பதற்குக் கஷ்டப்படும் ஒருவருக்கு அதாவது 'சேடம் இழுக்கும்' ஒருவருக்கு, அவர் தன்னுடைய வாழ்வில் அனுபவிக்க வேண்டிய 'ஆசைகள்' ஏதாவது மீதம் உள்ளதா என யோசித்து மண், பொன் முதலானவற்றைக் கரைத்து அவர் வாயில் ஊற்றுவதும், தொடர்ந்தும் அவர் மரணமாவதும், அவ்வாறு மரணமாகும் போது அவரின் ஆசைகள் தீர்ந்த பின்பே அவர் இவ்வுலகைவிட்டு நீங்கிச் சென்றுள்ளார் என்று நம்புவதுமான வழக்கம் தீவக மக்களிடம் பரவலாகக் காணப்படுகிறது.

சாதாரணமாக மூச்சுவிடக் கஷ்டப்படும் ஒருவருக்க மண், பொன் முதலானவற்றைக் கரைத்து வாயில் ஊற்றுவதன் மூலம் அவர் சுகமே உயிர் துறக்க வழி செய்யப்படுகிறது. இதனை ஒருவகையில் 'கருணைக்கொலை' யாகவும் பார்க்க முடியும் (Mercy Killing). இவ்வாறு பலதரப்பட்ட நம்பிக்கைகள் இறப்புத் தொடர்பாக வழக்கில் இருந்து வருகின்றன.

## 5.5 நிமித்தம் (சகுனம்)

'நிமித்தம்' என்பது வாழ்வில் பின் நிகழவிருக்கும் நன்மை, தீமைகளை சில குறியீடுகள் மூலம் முன்னுணர்த்துவதாகும். எந்தவொரு விடயத்திற்கும் நிமித்தம் பார்க்கும் நம்பிக்கை தமிழர்களிடையே தொன்று தொட்டே இருந்து வருகிறது. பண்டைக் காலத்தில் புள், நிமித்தம் அகிய இருவேறு சொற்களால் இதனைச் சுட்டி உள்ளமை தெரியவருகிறது.[16]

பிரயாணத்தைத் தொடங்கும் போது பிராமணர், நாவிதர், சலவைத் தொழிலாளி, எண்ணெ விற்பவர், விறகு விற்பவர் முதலானோர் எதிர்ப்படுவதும், பூனை, சாரைப்பாம்பு முதலானவை எதிர்ப்படுவதும் தீய சகுனங்கள் என்ற நம்பிக்கை வலுவாக உள்ளது.[17] பிராமணரை ஆசை நிரம்பியவர் களாகப் பார்ப்பதாலும், எண்ணெ விறகு முதலானவை இறுதிச் சடங்கோடு தொடர்பு உடையதாலும் இவ்வாறான நம்பிக்கை தோற்றம் பெற்றிருக்கலாம். மேலே குறிப்பிட்ட அடிப்படையிலே பிரயாணப்படும்போது பச்சைத் தென்னோலை தலையில் படுதலைக் கெட்ட சகுனமாக நம்பும் வழக்கமும் உள்ளது. 'பன்னாங்கு' பின்னுவதற்குப் பச்சைத் தென்னோலை பயன்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

சுமங்கலிப் பெண்கள், நிறை வாழ்வு வாழ்வோர், நிறைகுடத்துடன் எதிர்ப்படும் பெண்கள் முதலானோரையும், பசுமாட்டையும் நல்ல சகுணங்கள் என்று நம்புகிறார்கள்.

சகுனங்கள் வெளிப்படுத்துவதில் 'பல்லி' பிரதான இடம் வகிக்கின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் மட்டுமல்லாது பரவலாக இவ்வழக்கம் காணப்படுகிறது. பல்லியின் ஒலி நன்னிமித்தமாக அமைவதனை 'இனிய கூறும் பல்லி,'[18] 'நல்லதைக் கூறும் பல்லி',[19] 'நிகழ்வதைக் கூறும் பல்லி'[20], 'முதுவாய்ப் பல்லி',[21] 'கணவாய்ப் பல்லி',[22] என்று பொருள்பட அமையும் சங்கரிபாடல் வரிகள் காட்டி நிற்கின்றன.

ஏதாவது ஒன்றை நினைக்கும்போது பல்லி ஒலித்தால் ஒலிக்கும் திசையைக் கொண்டு பலன் பார்க்கும் நம்பிக்கை பரவலாக வழக்கிலுண்டு. ஒருவர் இறந்த பின்பு வைக்கப்படும் எட்டாம் நாட் படையலை குறிப்பிட்ட ஆன்மா ஏற்றுக் கொண்டதன் அடையாளமாகப் பல்லி ஒலித்தலை நம்புகி றார்கள். இந்நம்பிக்கை இன்றும் வழக்கில் உண்டு.

பல்லி ஒலித்தால் நிலத்தில் மூன்று முறை தட்டும் வழக்கமும், அதன் சொல்லை ஏற்றுக் கொள்ளும் வகையில் நாவினால் அதன் ஒலியை போலச் செய்யும் (Imitative)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமும் காணப்படுகிறது. வாக்கிய பஞ்சாங்கங்களில் பல்லி சொற்பலன் என்ற தனிப்பகுதி அமைந்துள்ளமையும் இந்நம்பிக்கையின் பயில்நிலை முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

காகம் கரைதலைச் சகுனமாக, நிமித்தமாகக் கொள்ளும் நம்பிக்கை பரவலாக உள்ளது. ஆய்வுப் பிரதேச மக்கள் காகத்தினைப் புனிதப் பறவையாகக் கருதுகின்றனர். சாதாரண பகுத்தாய்வு முறைகளுக்குப் புலனாகாத எதிர்கால நிகழ்ச்சிகளை அதீதப் புலன்காட்சி மூலம் முன்னதாகவே அறிந்து கூறும் ஆற்றல் இப்பறவைக்குண்டு. இறந்தோர்க்கு 'பிண்டம்' வைக்கும் பொருட்களைக் காக்கைக்குப் படைக்க வேண்டும் என்பது தொன்மையான நம்பிக்கையாக உள்ளது. இறந்தவர்கள் பறவையுருவில் வருவர் என்பதே இந்நம்பிக்கையின் அடிப்படையாக உள்ளது.

கூகை, ஆந்தை, பெட்டைக்கோழி என்பன கூவுதல், நாய் ஊளையிடுதல் முதலானவற்றைத் தீய சகுனமாக நம்புகின்றனர். ஆய்வுப் பிரதேச மக்கள் கூகையினைச் 'சாக்குருவி' என்று அழைக்கின்றனர்.

'தும்மலை'ச் சகுனமாகக் கருதும் நம்பிக்கை காணப்படுகிறது. தொடர்ச்சியாக ஒருவர் தும்முகின்ற போது சம்பந்தப்பட்டவரைப் பிறர் நினைப்பதாக நம்புகின்றனர்.[23] நல்ல காரியமொன்றை நினைக்கும்போது 'ஒற்றைத் தும்மல்' வெளிவந்தால் அக்காரியம் பாழ்பட்டுப் போகும் என்று நம்புகிறார்கள். இவ்வாறான அசெளகரியத்தைப் போக்கும் பொருட்டுச் சிலர் இரண்டாவது தும்மலைச் செயற்கையாகத் தும்மும் வழக்கமும் காணப்படுகிறது.

கண் துடித்தலை வைத்து நிமித்தம் பார்க்கும் நம்பிக்கை பரவலாக உள்ளது. பண்டைய இலக்கியங்களிலும் இந்நம்பிக்கை பயின்று வந்துள்ளது.[24] இடது கண் துடிப்பதனை நல்ல நிமித்தமாகவும், வலது கண் துடிப்பதனைத் தீய நிமித்தமாகவும் நம்புகின்றனர்.

கனவுகள் நம்பிக்கைகளாகவும், எதிர்காலத்தில் நடக்கவுள்ளவற்றை முன்கூட்டியே அறிவிப்பனவாகவும் உள்ளன. அடக்கி வைக்கப்பட்ட விருப்பங்களின் மறைமுகமான வெளிப்பாடாகவே கனவுகள் உள்ளன. கனவில் திருமணக்காட்சி, எண்ணெய் தேய்த்து முழுகும் காட்சி முதலானவற்றைக் கண்டால் அமங்கலமான செய்திவரும் என்று நம்புகின்றனர். அதேநேரம் இறப்புப்பற்றிய காட்சிகளைக் கண்டால் நன்மை நடக்கும் என்று நம்புகின்றனர். பகலில் காணும் கனவுகள் 'பலிப்பதில்லை' என்பது பரவலான நம்பிக்கையாகவுள்ளது.[25]

## 5.6 கண்ணூறுபடுதல் : (நாவூறுபடுதல்)

கண்ணூறுபடுதல் பற்றிய நம்பிக்கைகள் நடைமுறைகள் ஆய்வுப்பிரதேச மக்களிடையே பரவலாக வழக்கிலுள்ளன. தமக்கு விருப்பம் இல்லாதோர் பார்வை, தம்மீதோ, தமது முயற்சிகளின் மீதோ படுதலை கண்ணூறாகப் பார்க்கின்றனர்.

குழந்தைகளை வெளியில் கொண்டு சென்றால் வீட்டுக்குக் கொண்டு வந்ததும் குழந்தையின் கைகால்களைக் கழுவி கண்ணூறு கழித்து கரிப் பொட்டு இடுவது வழக்கமாக உள்ளது. புதுமணத் தம்பதி இணையாக வெளிக் கிளம்பினால் அவர்கள் வீட்டுக்கு வந்தவுடன் செத்தல் மிளகாய், உப்பு, வேப்பிலை, தெரு மணல் முதலானவற்றால் அவர்களை மும்முறை சுற்றி அவர்களுடைய எச்சில் துளிகளையும் உள்வாங்கி முற்றத்திலே எரித்து, எரிந்த அவிப் பொருட்களின் கரியினால் பொட்டு வைக்கின்றனர்.[26] உளவியல் ரீதியாக ஒரு பாதுகாப்பு உணர்வே இந்நம்பிக்கைகளின் அடிப்படை எனலாம்.

'கரிநாக்கு' உள்ளவர்களின் சாபம் பலிக்கும் என்ற நம்பிக்கையில் கரிநாக்குள்ளோர் விடயத்தில் பலரும் சற்று அவதானமாகவே நடந்து கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.7 பேய், பிசாசு :

பேய், பிசாசு பற்றிய நம்பிக்கை கிராமிய மக்களிடையே மிகவும் வலுவான நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகிறது. இறந்தவருக்கு உரிய சடங்குகளை, கடமைகளை ஒழுங்காக முறைப்படி செய்யாதுவிடின் அவரது ஆவியானது 'அந்தரிக்கும்', 'அலையும்' என்பது பரவலான நம்பிக்கையாக உள்ளது. இறந்தவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் இப்பயம் கலந்த நம்பிக்கை தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

பேயோட்டுவது, பில்லி, சூனியம் வைப்பது, வெட்டுவது தொடர்பான சடங்குகளும் நடைமுறைகளும் இன்றும் ஆய்வுப் பிரதேச மக்களிடையே வழக்கில் இருந்து வருகின்றன. தேசிக்காய், நீற்றுப் பூசனிக்காய், சேவல், திருநீறு, குங்குமம், வேப்பிலை, ஏழு கிணற்று நீர் முதலானவை இச்சடங்குகளின் பிரதான பூசைப் பொருட்களாக உள்ளன. விஷமுடைய பிராணிகள் தீண்டினால் 'பார்வை' பார்ப்பதன் மூலம் விஷம் இறக்கும் வழக்கம் இன்றும் கிராமப் புறங்களில் நடைமுறையில் உள்ளது.

இரவில் உணவுப் பதார்த்தங்களைக் குறிப்பாக மாமிச உணவுகளை இடம்விட்டு மாற்றி எடுத்துச் செல்லுகையில் கரித்துண்டு, இரும்புத்துண்டு முதலானவற்றை அவற்றுடன் சேர்த்து எடுத்தச் செல்லுவதன் மூலம் பேய், பிசாசுகளின் தாக்கத்திலிருந்து தப்பலாம் என நம்புகின்றனர்.

பாழடைந்த வீடுகள், கிணறுகள், சுடலைகள் முதலானவற்றுக்கருகில் நள்ளிரவில் நடமாடுவதற்குப் பலரும் அஞ்சுகின்றனர். மேற்படி இடங்களில் பேய்கள் குடியிருக்கம் என்பது நம்பிக்கையாக உள்ளது. இரவில் தனிவழி செல்வோர் தேவார, திருவாசகங்களையும் இறைநாமங்களையும் உரத்துப் பாடிச் செல்வதனூடே பேய்பற்றிய பயத்தைப் போக்கி வருகின்றனர்.

பண்டிகை காலங்களிலும், விசேட நாட்களிலும் 'பிதுரர்கள்' வீட்டுக்கு வருவர் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவரவர்க்கு விருப்பமான பொருட்களைப் படைப்பதை மக்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இறந்தவரது உடலைச் சுடலைக்குக் கொண்டு செல்கையில் வழி நெடுகிலும் எள்ளையும், நெற்பொரியையும் வீசிச் செல்வது வழக்கமாகவுள்ளது. இதற்குப் பின்வரும் நம்பிக்கை அடிப்பண்டயாக உள்ளது. அதாவது இறந்தவருடைய ஆவி திரும்பவும் வீட்டுக்கு வரவிரும்பினால், வழியில் வீசப்பட்டிருக்கும் எள்ளையும், நெல்லையும் பொறுக்கித் தின்று கொண்டுவரும் என்றும், அவ்வாறு ஒவ்வொன்றாகத் தின்று வருவதற்குள் பொழுது புலர்ந்துவிடுமாகையால் மீண்டும் அது சுடலைக்கே ஓடிவிடும் என்றும் நம்புகின்றனர். ஆய்வுப் பிரதேசங்களில் காணப்படும் சீரற்ற மின்சார விநியோகம் இவ்வாறான நம்பிக்கைகளை மேலும் வலுவூட்டி வருகிறது.

## 5.8 விதி

விதி, தலைவிதி, ஊழ் பற்றிய நம்பிக்கைகள் பரவலாக வழக்கில் உள்ளன. முற்பிறப்பில் ஒருவர் செய்த நன்மை, தீமைகளுக்கு ஏற்பவே இப்பிறப்பில் ஒருவருடைய இன்ப துன்பங்கள் அமைகின்றன27 என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளதனை அவதானிக்க முடிகிறது. சொர்க்கம், நரகம் பற்றிய செய்திகளும் இதனோடு தொடர்புடையதாக வழங்கி வருகின்றன. விதித்த விதிப்படிதான் எதுவும் நடக்கும் என்றும், தலைவிதியை யாராலும் மாற்ற முடியாது என்றும் இம்மக்கள் வலுவாக நம்புகின்றனர். 'ஊழ்' பற்றிய நம்பிக்கைகள் மனிதனின் நன் நடத்தையினை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்றிருக்கலாம் என்றும், மனிதனுடைய துன்பங்களுக்குக் காரணம் கண்டு அமைதி காணும் முயற்சியாக 'விதி',



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தலைவிதி' பற்றிய நம்பிக்கைகள் உருவாகி இருக்கலாம் என்றும் கருத இடமுண்டு.

## 5.9 திட்டு (சாபம்)

சமயப் பெரியவர்கள், பிராமணர்கள், வயதில் மூத்தோர் முதலானோர்களிடமிருந்து 'திட்டு' பெறக்கூடாது என்றும் அவ்வாறு பெற்றால் அது நடக்கும் என்றும் பலரும் நம்புகின்றனர். பெற்றோர் தம் பிள்ளைகளை வயதில் மூத்தோரிடத்தில் அனுசரித்துப் போகும்படி வலியுறுத்துவதனை அவதானிக்க முடிகிறது. 'மண் அள்ளித் திட்டுதல்' என்பது பாரதூரமான ஒன்றாகக் காணப்படுகிறது. திட்டின் மூலம் சமூக நியதிகளைப் பேணிப் பாதுகாக்கலாம் என்ற அடிப்படையிலேயே இந்நம்பிக்கை தோற்றம் பெற்றிருக்க வேண்டும்.

## 5.10 மாதம், கிழமை :

மாதங்கள், கிழமைகள் பற்றிய நம்பிக்கைகள் விதம் விதமாக வேரூன்றி உள்ளன. இவை தொல்கதைகளோடும் இயற்கையோடும் இணைந்தவையாகவும் காலங்காலமாகப் பின்பற்றப்படுவனவாகவும் உள்ளன.

மக்களிடையே 'தைமாதம்' சிறந்த மாதம் என்ற நம்பிக்கை வலுவாகக் காணப்படுகிறது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற பழமொழி இந்நம்பிக்கையின் பாற்பட்டதாக வழங்கப்பட்டு வருகிறது. பெண்ணுக்குத் திருமணம் செய்வதற்கும், பிள்ளை பெறுவதற்கும் ஏற்ற காலமாக இம்மாதத்தினைக் கருதுகின்றனர். மாசி மாதத்தினையும் சிறப்பானதாகவே கருதுகின்றனர். பங்குனியில் 'குடிவருதல்' செழிப்பைத் தராது என்ற நம்பிக்கையுள்ளது.

சித்திரை, ஆவணி, ஐப்பசி முதலான மாதங்களிலும் நல்ல காரியங்களைச் செய்யும் நம்பிக்கை வழக்கம் காணப்படுகிறது. ஆடிமாதம் சிறப்பில்லாத மாதம் என்ற நம்பிக்கை காணப்படுகிறது. ஆடியில் பூப்படைதல், திருமணம் செய்தல், குழந்தை பெறுதல் முதலானவற்றை மக்கள் விரும்புவதில்லை.[28] மார்கழி மாதத்தை பீடைபிடித்த மாதம் என்று கருதுகின்றனர்.

கிழமைகளில் செவ்வாயைச் சிறப்பான நாளாகக் கருதுவதில்லை. 'செவ்வாய் வெறுவாய்' என்ற தொடர் கிராமப்புறங்களில் சர்வ சாதாரணமாக வெளிவரக் காணலாம். 'பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது' என்ற பழமொழி புதன் கிழமையின் சிறப்பினை உணர்த்துவதாக உள்ளது. இக்கிழமையில் நல்ல காரியங்களைச் செய்தால் நன்மை பயக்கும் என்று மக்கள் நம்புகின்றனர். வியாழக்கிழமையினைச் சிறப்பான நாளாகக் கருதும் வழக்கம் இல்லை. 'கள்ள வியாழன் கழுத்தறுக்கும்' என்ற பழமொழி இப் பின்னணியில் உருவானதே. வெள்ளிக்கிழமைகளில் பிரயாணம் செய்வது, பிறருக்குப் பொருள்களை வழங்குவது, நகம், தலைமுடி முதலானவற்றை வெட்டுவது ஆகியவற்றைச் சிறப்பில்லாத செயற்பாடாக நம்புவதால் அவற்றைத் தவிர்த்து வருகின்றனர்.

சனிக்கிழமைகளில் யாராவது இறந்து விட்டால் தொடர்ச்சியாக இறப்புக்கள் நடைபெறும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது. இதனால் இறந்தவரின் உடலைத் தகனம் செய்ய எடுத்துச் செல்கையில் இரும்புத்தண்டு, தென்னங்கன்று, சேவல் முதலானவற்றை உடன் எடுத்துச் செல்லும் வழக்கம் காணப்படுகிறது. இதன்மூலம் தொடர் இறப்புக்களைத் தவிர்க்கலாம் என்று ஆய்வுப் பிரதேச மக்கள் நம்புகின்றனர். ஞாயிறுப் பிரயாணம் 'நாய் போல் அலைச்சல்' என்பதால் பலரும் இந் நாளில் பிரயாணப்படுவதை விரும்புவதில்லை.

இவ்வாறு மாதங்கள், கிழமைகள் பற்றிய நம்பிகைகள் நிலவிவருகின்றன. இயற்கையோடும், அவரவர் வசதிகளோடும் இந் நம்பிக்கைகள் பெரிதும் தொடர்புள்ளனவாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5.11 எண் :**

எண்கள் தொடர்பான நம்பிக்கை படித்தவர்களிடமும் அதிகமாக உள்ளதனை அவதானிக்க முடிகிறது. எண்களில் ஒற்றை எண்கள் (Odd numbers) நன்மை பயக்கும் என்றும், இரண்டை எண்கள் (Even numbers) தீமை பயக்கும் என்றும் நம்புகின்ற தன்மை வழக்கில் உள்ளது. தங்களுடைய பிள்ளைகளுக்கு தம் முன்னோர்களுடைய பெயர்களையே இட்டுவரும் வழக்கத்தை மாற்றி, எண் சாத்திரப்படி பெயரிடும் வழக்கம், நம்பிக்கை, கிராமப்புறங்களிலும் வேரூன்றியுள்ளதனை அவதானிக்க முடிகிறது. வீட்டு இலக்கம், வாகன இலக்கம் முதலானவற்றைக் கூட தத்தமக்குச் சாதகமாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கை ஆய்வுப்பிரதேச மக்களிடமும் காணப்படுகிறது.

**முடிவுரை**

ஆய்வுப் பிரதேச மக்களிடையே நம்பிக்கைகளும், மூட நம்பிக்கைகளும் பெருமளவில் இன்றும் வழக்கில் உள்ளதனை இனங்காண முடிகிறது. தீவக மக்களிடையே உள்ள ஊடாட்டம் காரணமாக இப்பகுதி மக்களிடையே பயில்நிலையில் இருந்துவரும் நம்பிக்கைகளில் ஒருவிதமான பொதுத் தன்மையினை அவதானிக்க முடிகிறது.

நம்பிக்கைகளுக்கும், தெய்வங்களுக்கும் இடையே கற்பிக்கப்பட்டுள்ள உறவு காரணமாக பலரும் இந்நம்பிக்கைகளை ஒருவித பயபக்தியோடு பின்பற்றி வருகின்றனர்.

சில நம்பிக்கைகள், அவை மூட நம்பிக்கைகள் என்று தெரிந்திருந்தும் கூட, மூக நிர்ப்பந்தம், சமூக ஒழுங்கு காரணமாக அவை தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது.

நம்பிக்கைகளுக்கான சமூகவியல், உளவியல் அடிப்படைகளைச் செவிமடுக்கும் மனோபாவம் ஆய்வுப் பிரதேச மக்களிடையே குறைவாகவே காணப்படுகிறது.

தீவுப் பகுதிகளுக்கும், யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்குமிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட தொடர்புகள் காரணமாகப் பல்வேறு நம்பிக்கைகளும் பாரம்பரிய நடைமுறைகளுடன் அவ்வாறே தொடர்ந்தும் பயில்நிலையில் இருந்து வருவதனை அவதானிக்க முடிகிறது.

பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு, நிமித்தம், கண்ணூறு, பேய், பிசாசு, விதி, திட்டு, மாதம் கிழமை, எண் முதலானவை தொடர்பாகப் பயில்நிலையில் இருந்துவரும் சிற்சில நம்பிக்கைகளே இங்கு எடுத்து விளக்கப்பட்டுள்ளன. மேலும் பல நம்பிக்கைகள் இவற்றோடும், பிறவற்றோடும் தொடர்புடையவனவாக வழங்கி வருகின்றன. இந்நம்பிக்கைகளை முறைப்படி பதிவு செய்வதன் மூலம் நாட்டாரியல், சமூகவியல் தொடர்பான விரிவான ஆய்வுகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள முடியும்.

**அடிக்குறிப்புகள்**

1. *தொல்காப்பியம்,* சொல்லதிகாரம், நூற்பா, 329.
2. *நற்றிணை,* பாடல், 175: 7–8, 327; 1–3.
3. *மதுரைத் தமிழ்ப் பேரகராதி,* இரண்டாம் பாகம், பக். 13.
   *தமிழ் லெக்சிகன்,* Vol : IV, ப. 2155.
   *பெயரகராதி,* ப. 59.
   *கிரியாவின் தற்கால தமிழகராதி,* ப. 1346.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செந்தமிழகராதி,* ப. 415.
*தமிழ்ச் சொல்லகராதி,* ப. 1346

4. சாந்தி. க: (1984), *' நாட்டுப்புற நம்பிக்கைகள்'.* நாட்டுப்புறவியல் 1, 3, 4, ப. 90.

5. திருநாவுக்கரசு, க. த. (1970), *'திருக்குறளுக்கு உரைகள் வேண்டுமா?',* Annals of Oriental Research Vol XXIII; .14

6. James Bissett Pratt, (1908), *The Pschology of Religious Belief,* P. 32.

7. தகவல் ; திருமதி. பொ. தங்கமுத்து, நயினாதீவு வடக்கு, வயது 78.

8. தகவல் ; திருமதி. ம. சிவாகாமசுந்தரி, நயினாதீவு தெற்கு, வயது 57.

9. தகவல் ; சி. செல்லத்துரை, வேலணை, வயது 70.

10. செல்வராசு. இரா. (1983), *"கொங்கு நாட்டில் கன்னி வழிபாடு"*தொல்லியல் கருத்தரங்கு, தொகுதி 1, பக். 119 – 120.

11. வயலட்ராணி. ஜோ. (1985), *கீழ்ப்பாலூர் ஊராட்சி – ஓர் ஆய்வு,* பக். 55.

12. Thomson. G, (1978), *The Pre Historic Aegean, Law-rence and Wishart,* P. 206.

13. தகவல் ; பொ. அன்பரசன், கிராமசேவையாளர், அனலைதீவு, வயது 31.

14. தகவல் : சி. மாரியன், நெடுந்தீவு, வயது 67.

15. தகவல் : திருமதி. கி. விசாலாட்சி, நயினாதீவு வடக்கு, வயது 70.

16. தகவல் : ச குகனேசன், நெடுந்தீவு, வயது 38.

17. குறுந்தொகை, பாடல், 140; 1–3, **தொல்காப்பியம் பொருளதிகாரம** 39; 1–4.

18. தகவல் : கா. சின்னையா; எழுவைதீவு, வயது 67.

19. *நற்றிணை,* பாடல் ; 246: 1–2.

20. *மேலது.* பாடல் 333: 10–12

21. *அகநானூறு.* பாடல் 151: 13–15

22. *மேலது,* பாடல், 387: 14–16

23. *மேலது.* பாடல்: 151: 14–15

24. தகவல்: ஐ. வேலுச்சாமி, புங்குடுதீவு, வயது 63.

25. *திணைமாலை நூற்றைம்பது* 80, *சிலப்பதிகாரம்* 5: 237 – 239

26. தகவல்: வே. பரமலிங்கம், நயினாதீவு, வயது 71.

27. தகவல்: திருமதி. ச. உதயகுமார், வேலணை, வயது 58.

28. தகவல்: சி. வேலாயுதப்பிள்ளை, நெடுந்தீவு, வயது 70.

29. தகவல்: பு. சின்னராசு, எழுவைதீவு, வயது 49.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org